# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

## தொகுதி – III







பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் வ. மகேஸ்வரன்

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் வ. மகேஸ்வரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | |
| விலை | : | உரு. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 11 - 6**


# International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. V. Mageshwaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | |
| Prize | : | **Rs. 350/-** |

219. **வன்னியசிங்கம் கபிலன்** 1040
இருபதாம் நூற்றாண்டு ஈழத்துச் சைவ சமய வளர்ச்சி
சேர் பொன். இராமநாதனை முன்வைத்துச் சில குறிப்புகள்

220. **பேராசிரியர் துரை. மனோகரன்** 1047
இலங்கைத் திருநாட்டின் இன்னொரு நாவலர்
(சபாபதி நாவலரை முன்வைத்து ஒரு நோக்கு)

221. **டி. நிரஞ்சனி** 1053
சுவாமி விபுலானந்தரின் கலைகளும் தற்கால
கலைகளும் ஓர் மெய்யியல் நோக்கு

222. **எம். வை. எ.்.ப். ரிஸ்மியா** 1061
தமிழ் வேற்றுமை ஆய்வில் கால்டுவெல்

223. **கலாநிதி எஸ். வை. ஸ்ரீதர்** 1068
சுப்பிரமணிய பாரதியாரின் கண்ணன் பாட்டு

224. **கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்** 1076
சி. கணேசையரின் இலக்கண ஆராய்ச்சி - ஒரு நோக்கு

225. **பா. சுமன்** 1084
ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற
தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகைகளும் பின்புலமும்
(சி.வை.தாமோதரம்பிள்ளையை முன்வைத்துச் சில
குறிப்புகள்)

226. **முருகுதயாநிதி** 1092
சுவாமி விபுலாநந்த அடிகளும் கங்கையில் விடுத்த
ஓலையும் (கல்வி பற்றிய ஒரு நோக்கு)

227. **நா. வாமன்** 1098
மட்டக்களப்பிற் சைவ சமய மறுமலர்ச்சியும்
அருணாசல தேசிகரும் (1888 - 1969)

228. **சு. தனலட்சுமி** 1105
தமிழுக்கு வாய்த்த அரும்புதல்வர் ரசிகமணி டி.கே.சி.

229. **அ. டெய்சிராணி** 1110
உ.வே.சா. வழியில் பெர்சிவல் பாதிரியார்

230. **முனைவர் வெ. சுகந்தா** 1113
மு. இராகவையங்காரின் தமிழ்த்தொண்டு

231. **முனைவர் எம். ராஜா** 1116
பாரதியார் ஆத்திசூடியில் இடம்பெறும் சமுதாயச்
சிந்தனைகள்

232. **எம்.எம். ஜெயசீலன்** 1119
தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில்
சி.வை. தாமோதரம்பிள்ளை

233.
234.
235.
236.
237.
238.
239. தி.
240. கல
241. K. K
Loss
242. மு
243. த.
244. வா.
245. மு
246. மு
உ.வே
247. சி.

# 230. மு. இராகவையங்காரின் தமிழ்த்தொண்டு

**முனைவர் வெ. சுகந்தா**
*இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழன்னைக்குப் பற்பல அறிஞர் பெருமக்கள் தனது பங்களிப்பை நல்கியுள்ளனர். தமிழ் இன்று தனித்தமிழ் இயக்கமாக, செம்மொழியாகத் தழைத்தோங்கியுள்ளது. தமிழில் உள்ள அரிய பல கருத்துகளையும், நுட்பங்களையும் தமிழர் மட்டுமன்றி உலகில் உள்ள அனைவரும் அறிந்துகொள்ளவும், தமிழின் இனிமை, அதன் நயம், எளிமை ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளவும் தமிழ் அறிஞர்கள் அயராது பாடுபட்டனர். அவர்களது அரும்பணிகள் இன்று நமக்குக் கிடைத்தற்கரிய பொக்கிஷமாகவும், வரலாறாகவும், இலக்கியமாகவும் பரிமளிக்கின்றது. தமிழ்த்தாய்க்குத் தங்களது கல்வியால் தொண்டு செய்த அறிஞர் பெருமக்களுள் ஒருவர் மு. இராகவையங்கார் ஆவார்.

## இளமைக்காலம்

'பழமையில் உள்ள நல்லவைகளையும், உபயோகம் உள்ளவைகளையும் வைத்துக்கொண்டு புதுமையைப் படைப்பதுதான் சிந்தையாளருக்கு அழகு என்ற வ.ரா. வின் கருத்துக்கு ஏற்ப இதழியல், வரலாற்றியல், ஆய்வியல் மூலம் தொண்டுகள் பல புரிந்த பெருமகனார். மு.இரா. இவர் செய்த பணிகள் தமிழுலகையே வியக்க வைத்தது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேது சமஸ்தானத்தின் தலைநகரமான இராமநாதபுரத்தில் சில வைணவக் குடும்பங்கள் குடியேறின. அத்தகைய குடும்பங்களில் மு.இராகவையங்காரின் முன்னோர்களின் குடும்பமும் ஒன்று. அப்போது சேது சமஸ்தானத்தை முத்துராமலிங்க சேதுபதி மன்னர் ஆண்டு வந்தார். அந்த மன்னரின் அமைச்சராகப் பணியாற்றியவர் முத்துசாமி ஐயங்கார். அவரின் ஒரே வாரிசுதான் மு.இராகவையங்கார். இவர் அரியக்குடியில் 1878-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 26-ஆம் தேதி பிறந்தார். இவர் படிப்பில் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். இளம் வயது முதலே ஆய்வு மனப்பான்மை கொண்டவராக விளங்கினார். இவரின் 16-ஆவது வயதில் தந்தையார் காலமானார். அப்போது அவருக்கு ஆதரவுக்கரம் நீட்டியவர் பாண்டித்துரைத் தேவர்.